## மது வரி திணைக்களத்தின் மது வரி வெகுமதி நிதியம் - 2014

மது வரி திணைக்களத்தின் மது வரி வெகுமதி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1912 இன் 8 ஆம் இலக்க மது வரி கட்டளைச் சட்டத்தின் 58 ஏ பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 1994 மார்ச் 4 ஆம் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 1(iii) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மது வரி திணைக்களத்தின் மது வரி வெகுமதி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இற்கு முரணாக காசு அடிப்படையில் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயிற்சி பாடசாலைக் கட்டிட நிர்மாணத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது மாகாண சபைக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 47,134,000 தொகையான முற்பணத்திலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 39,984,096 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் அது நடைமுறை வேலையாகவும் எஞ்சிய தொகையான ரூபா 7,149,904 முற்பணக் கொடுப்பனவுகளாகவும் காண்பிப்பதற்குப் பதிலாக மொத்தத் தொகையும் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) விஷேட சந்தர்ப்பமொன்றினை தவிர செலவினமொன்றை வருமானத்தில் ஈடு செய்து காண்பிக்க கூடாத போதிலும் மீளாய்வாண்டில் இணக்க கட்டணங்களின் பெறுவனவுகள் அந்தக் கட்டணங்களின் கொடுப்பனவுகளுக்கு ஈடுசெய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,615,247 கூட்டுத்தொகையான இணக்க கட்டணங்கள் தண்டப்பண நிதியத்தின் வருமானமொன்றாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக திறைசேரியின் வருமானத் தலைப்பில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) சட்டரீதியான ஏற்பாடுகள் | |
| 1999 இன் 08 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவு | புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் கீழ், அறவிடப்படும் தண்டப் பணத்தில் 1/4 பங்கு புகையிலை வெகுமதி நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டியதுடன் இதற்காக அதிகாரச்சட்டத்தின் 17(ii) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரால் முன்மொழியப்படும் முறையொன்றின் பிரகாரம் மது வரி ஆணையாளர் நாயகத்தினது கட்டுபாட்டின் கீழ் பேணப்படும் வெகுமதி நிதியம் ஒன்று நிறுவப்பட வேண்டும். அதற்கு முரணாக புகையிலை தண்டப்பணப் பெறுவனவுகள், மது வரி வெகுமதி நிதியத்தின் கீழ் புகையிலை வெகுமதி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) திறைசேரி சுற்றறிக்கைகள் | |
| (i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிதியத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப்பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனி, கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப்பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 63,375,039 மிகையாக இருந்ததுடன் இதற்கு ஒப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 44,957,705 ஆக இருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 18,417,334 தொகையான அதிகரிப்பினைக் காட்டியது. இணக்க கட்டணப் பெறுவனவுகள் ரூபா 33,470,068 அளவினால் அதிகரித்திருந்தமை மிகையின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் 5,319 மதுவரி தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புக்கள் மூலம் ரூபா 163,101,331 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது 6,420 மதுவரி தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புக்கள் மூலம் ரூபா 129,143,113 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டில் தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புகளிலிருந்தான வருமானம் ரூபா 33,958,218 தொகை அல்லது 26 சதவீதமான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 1994 மார்ச் 04 ஆம் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 4.5 ஆம் பிரிவின் படி துணிச்சலான செயற்பாடுகள் அல்லது விசேட ஏற்றுக்கொள்ளல் நடவடிக்கைகளுக்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 200,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட அவ்வாறான செயற்பாடுகளுக்காக நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

1994 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் படி உருவாக்கப்பட்ட ‘‘மதுவரி வெகுமதி’’ நிதியத்திலிருந்து மதுவரி உத்தியோகத்தர்கள், தகவல்களை வழங்குவோர் மற்றும் ஏனையோருக்கு வெகுமதியினை செலுத்துவதற்கும் துணிச்சலான செயற்பாடுகள் அல்லது விசேட ஏற்றுக்கொள்ளல்கள் செயற்பாடுகளுக்கு பொருத்தமான உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட எழுத்துமூல திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2015 யூலை 31 ஆந் திகதி வரையும் அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 செயல்நடவடிக்கையைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

## 5.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

நிலையான சொத்துக்களுக்காக வருடாந்த பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்ற தொகைக்கு சமமான தொகை திறைசேரியில் பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 14,123,123 தொகையான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யும் போது அந்த பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியம் பயன்படுத்தப்படாமல், மதுவரி வெகுமதி நிதியத்திலிருந்து மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது மது வரி ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு